உ

சிவமயம்.

# விவேகவிளக்கம்.

மகாமகோபாத்யாய டாக்டர்
உ. வே. சாமிநாதையர் நூல் நிலையம்
அடையாறு சென்னை 20.

இஃது

ஆயுர்வேத பண்டிதர்

பாண்டேசுரம் - வெங்கடஸாமி தேவரவர்கள்

குமாரர்

## பா. கங்காதரதேவரவர்களால்

இயற்றி

சென்னை 20.

பிரஸிடென்ஸி அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பெற்றது.

---

1910.

உ

சிவமயம்.

# விவேகவிளக்கம்.

இ ்

ாடிதா

பாண்டேச்சுரம் 'மி தேவரவர்கள்

குய

பா. கங்காதரதேவரவர்களால்

இயற்றி

மகாமகோபாத்தியாய
டாக்டர். உ. வே. சாமிநாதையர்
நூல் நிலையம்,
சென்னை - 600090.

சென்னை
பிரஸிடென்ஸி அச்சுக்கூடத்தில்
பதிப்பிக்கப்பெற்றது.

1909.

சிவமயம்.

# விவேக விளக்கம்.

## பாயிரம்.

### விநாயக வணக்கம்.

சிவானந்த போதக திறமளிக்கு நாளு
மவானந்த போத மறுக்கும - உவாவென்ற
வேரம்பா தாட்கமல மிந்திரரு மேதவரு
மோரம்பர் காட்சமல மே. (௧)

### பரசிவ வணக்கம்.

அசர வுயிரம்பா லினைத்துமாய் வேறாய்
நிகர லுயிர்க்குயிராய் நின்ற - பகவன்றன்
பாதார விந்தம பழிச்சாதா ரஞ்ஞானக்
கோதார விங்கலவா கூறு. (௨)

### அவையடக்கம், அதிகாரி, நூற்பெயா முதலியன.

வேதாந்தத் துடபொருடோ வேதியாக்கும வித்தகர்க்கும்
போதாந்தத் துட்பொருடோ புண்ணியாக்கும் - நாதாந்த
மேவியபோ யோகியர்க்கும விறபணாக்குஞ் சொற்றதன்றே
நாவில் விவேகவிளக்கம். (௩)

செயறகை யறிவானுந் தோந்தடைவார் சத்தை
யியறகை யறிவாள ரென்றும - மயக்க
விவேகத்தாற் பேட்டியுபா வீணருக்குச் சொன்ன
விவேக விளக்கமிது வே. (௪)

மாயாவா தத்தான் மதிபபிரமங் கொண்டுநிறபோர்
மாயாவா தந்தீர்ந்த மாண்பொருளை - வாயார்ந்து
வித்துவான்க ளாவான் விவேகவிளக் கந்தந்தான்
தத்துவந்தோ கங்கா தரன். (௫)

# விவேக விளக்கம்.

## நூல்.

க.—ஆசிரியா.

குணமரு ணறமெய்யவங் கொள்கை முதலா
நலமுடைய வாசிரியா நண்ணிற் - கலகமறும்
பொய்ஞ்ஞானம் போமொளியும் பொல்லாத கெலாநீங்கும்
மெய்ஞ்ஞானந் தான்விளங்கு மே (க)

எல்லாக் கலைகட்கு மேதுவாய் நிற்பவரோ
நல்லா சிரியப்போ நண்ணுவார் - நலமேலோர்தம்
நூலை யிகழ்ந்தும்புன் னூலைப் புகழ்ந்துஞ்சொன்
மாலையுளார்க் குண்டோ மதி. (உ)

அற்பகுணஞ் செய்கை யமைந்துள்ளார் வேதாந்தச்
சொற்பகரு மாரியராய்த் தோன்றிடுதல் - மறபிடித்து
வாதாடு தற்கோ வயிறு வளர்ப்பதற்கோ
மாதாடு தற்கோ மதி. (ங)

மூட வுருவாய் முளைத்தபுல லாசிரியன்
பிடனஞ் ஞானத்தைத் தீர்ப்பானோ - வாடலிலா
நூற்பொருளைத் தேர்வானோ நோற்பானோ வனமறத்தின்
பாற்பட்டுத் தூக்கிப் பவன். (ச)

சக்கிலிக்கு முன்னுசான் சக்கிலியே பறையனை
யிக்கலியிற் கணனுடையா ரெய்துவரோ - சக்கிலியை
யாசானுக் கொள்வோ னகத்திருளி னீங்கலெங்கே
யீசானைத் தலெங்கே யெண. (ரு)

கிட்டை தெளிந்தவர்போ னிலைத்தில வேதாந்தங்
கொட்டி யளப்பார் குருக்களாய்த் - துட்ட
மனமாய்க்க மாட்டாது வாயாடக் கற்ற
சினமாயா வாதியரே தேர். (சா)

குருவாகி நிற்பாருங் கூடா வொழுக்க
வுருவாகி நிற்பாரு மோதுந் - தெருவாசல்
நின்றுசண்டை செய்வாரு நிந்திப்பா ருந்தீமை
யொன்றுமாயா வாதிகடா மோர். (எ)

## ௨.—சாத்திரம்.

வேதாகமங்கள் விதிப்பனவே மெய்ஞ்ஞானம்
வேதாந்த சூத்திரமு மெய்ஞ்ஞானம் - யாதானு
மோரபிமா னத்த ருரைப்பனவா நூல்களெல்லாம்
போரபிவிர்த் திக்காம் புகல். (௧)

உத்தரமீ மாஞ்சைக்கிங் கோதுநற் பாடியங்க
ளொத்தகருத் தில்லவா மொன்றுக்கொன் - றுத்தமர்கள்
ஆராய்ச்சி செய்தே யரும்பொருள்கொள் வாரல்லார்
போராடித் தீர்வார் புகுந்து. (௨)

பேதா யபேதமுடன் பேத மெனவுநற்
பேதாபே தம்மெனவும் பேசுவதென் - வேதாந்த
சூத்திரத்தாற் சொல்பொருளைத் தொல்லா சிரியருமிங்
காத்திரத்தா லாய்தலில ரா. (௩)

உவநிடதம் பத்துக்கு மோதுகீ தைக்குந்
தவநிலையிற் சங்கரர்தாஞ் சாற்று - மூவங்கியாச
வண்மையறி யாமையினுன் மாயாவா தங்கொண்டா
ருண்மைய லாகியுள்ளா ரோர். (௪)

சங்கரர் வாக்கைச் சரியாகப் பாராது
பொங்கிப் புகல்கின்றார் புல்லறிவால் - சங்கரர்தா
முக்கணனைப் பூசித்தன் மூதறிஞ ரைப்போற்ற
லெக்கரும மீத்தா ரியம்பு. (௫)

வித்தியா ரண்ணியர்செய் வேதத்தின் பாடியத்தைப்
புத்தியா லாயப் புலப்படுதல் - சத்தியமே
சொன்மார்க்க மத்தனைக்குந் தோஷமற நிற்கின்ற
சன்மார்க்கஞ் சைவமென்று தான். (௬)

வித்தியா ரண்ணியர்செய் வேதாந்த பஞ்சதசி
சித்தியா ரண்ணியது செப்பதன்கண் - சத்தியத்தை
யாயாதா ரெல்லா மநர்த்தமது கொண்டென்று
மோயாவா தத்துற்றா ருன். (௭)

வாசிட்ட நூலில் வருங்கதைகள் தத்துவந்தேர்
மாசிட்ட ருக்கன்றே மாநிலத்தில் - ஆசிட்ட

பொய்ஞ்ஞானத் தோர்க்கும் புரட்டருக்கு மாயினவான்
மெய்ஞ்ஞானி யுய்த்துணர்வான் மேல். (அ)

கண்ணன்சொல் கீதைதன் காரியார்த் தம்மென்றே
யெண்ணங்கொள் ளார்க்கே திறைஞான - மண்ணல்
கவுரவரைச் சேனைகளைக் காதி மடிப்பான்
பவுரஷமுண் டாக்கியது பார். (௯)

செப்புவது மாவாசு தேவ மகாநூல்
தப்பிலா வத்துவிதந் தானென்ப - ரப்படியே
செய்யதமிழ்க் கைவலியஞ் செப்புவது மாமென்பர்
வெய்யகுண மேனவர்க்கு விள். (க0)

"ஒன்றுரைத்த தொன்றுரையாச் சாத்திரங்க ளொன்றாக
நின்றுரைத்து நிச்சயிக்க மாட்டாவா - வின்றுரைக்க
வென்று வியன்றிடுமோ வென்போல்வா ரேதேனுஞ்
சொன்னாற்று னேறுமோ சொல்." (கக)

"தேவர் குறளுந் திருநான் மறைமுடிவு
மூவர் தமிழு முனிமொழியுங் - கோவை
திருவா சகமுந் திருமூலர் சொல்லு
மொருவா சகமென் றுணர்." (கஉ)

"வேதம் பசுவதன்பால் மெய்யா கமநால்வ
ரோதுந் தமிழதனி னுள்ளுறுநெய் - போதமிகு
நெய்யி னுறுசுவையா நீள்வெண்ணெய் மெய்கண்டான்
செய்த தமிழின் றிறம்." (க௩)

மூதறிஞர் மெய்ந்நூற்கு மூடர்நவில் பொய்ந்நூல்க
ளோதமற வொப்பாகு மென்றிசைப்பார் - சோதனையில்
கற்றறிவில் லாருங் கருவமிகக் கொண்டாரு
மற்றபெருந் தன்மையரு மாய். (கச)

சாத்திரத்தி னுண்மை தனையறிய மாட்டாதார்
சாத்திரத்தா லிங்கென்ன சாதிப்பார் - ஆத்திரத்தால்
வம்பாட வல்லார் மறைந்துமா யாவாதக்
கும்பாட வல்லார் குதித்து. (கரு)

### ௩.—கல்வி.

இலக்கியந் தர்க்க மிலக்கண மெல்லாங்
கலக்கமுறக் கற்றல் கலகக் - கிலக்காகும்
வீண்வழக்குக் காமென்றே வேதாந்தங் கற்பதுவுஞ்
சாண்வயிற்றுக் காமென்றே சாற்று. (௧)

தற்பரவி லக்கியமே தாமாகக் கொண்டுரைக்கு
மற்பருட னேசித்த லாகுமோ - சொற்படியே
செல்லா ருடுக்களுக்குந் தேசுமிகு சூரியற்குஞ்
சொல்லாரோ பேதந் துணிந்து. (௨)

தருக்கம் படித்துத் தருக்கை யடைந்தார
தருக்கம் பொருணிலையைத் தாரா - துருக்கத்தா
'லோங்குணர்வி னுள்ளொடுங்கி யுள்ளத்து ளின்பொடுங்க'
ஆங்குதரு மென்றே யறி. (௩)

தம்மிலக்க ணங்கல்லார் தற்பரவி லக்கணத்தைத்
தம்முடைய தென்றே தருக்கிப்பார் - எம்மிறைசொன்
மாவாக்கி யார்த்த மகநஞ்செய் யாதுமட
மாவாக் கிசைக்கின்ற வா. (௪)

எழுத்துப் படியே யெழுத்துப் படித்தா
ரெழுத்தா லியங்குவதி யாதோ - வெழுத்தை
யியக்குவதி யாதோ வியக்கமிலா ரோரார
மயக்குவது மான மதி. (௫)

சொல்லைத் தெரிந்துகொண்டோர் சொல்லத் தெரிந்துகொண் [டா
ரல்லாமற் றாமே யறிந்ததுண்டோ - புல்லறிவால்
தாம்பிரம மென்றதூஉஞ் சார்ந்ததன் வண்ணமாந்
தாம்பிரமங் கொண்டதனாற் றான். (௬)

'பொருளல்ல வற்றைப் பொருளென் றுணரும்
பொருளிய றேரும் புலவர் - மருளறவே
'எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினு மப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப' தரிது. (௭)

யாப்பியல் கற்றோரே யாப்பை யுணர்ந்தாரா
யாப்பா லியக்கமற்றோ ராரேகாண - மூப்புடையாய்

# விவேகவிளக்கம்.

யாப்புண்டோ வப்பொருட்கு யாப்புவந்த வாறேது
யாப்புண்ட தாமோ வது. (௮)

அணியியலிற் றேர்ந்தேமென் றுடையணி யாதி
யணியியலிற் றேர்ந்தோ ரகத்தா - லணியியலு
மீசனடிப் போதெனவே யெண்ணுவரோ வம்மாக்க
ளீசனவன் றாமாத லென்று. (௯)

படிப்பார் பரநாடார் பட்டமிகக் கொள்வா
ரிடிப்பா ரிலாமையினு லிங்கே - தடிப்பார்
பொருளுரைப்பா ரெந்நூற்கும் புத்தியினு லாயார
மருளுரைப்பார் பண்டிதர்கள் மன். (௧௰)

வினவுவோர் தம்மை மிகவேண்டி யின்ன
வினவுவீ ரென்ன விரும்பு - மனுர்தம்
முளவா லவதார மோதுவரோ கல்வி
யளவா லறிவான்மிக் கார். (௧௧)

புத்தகத்தைப் பார்க்குமுன்னே போதநா னேயுண்மை
மித்தைபிற வென்றே விளம்பிடுவா - ரத்தை
விரிக்குமுன் னேகிட்டை மேவினறபோன் ஞானந்
தெரிக்கவரு வாரே சிலர். (௧௨)

எழுத்தொடு சொற்பொருள் காணுர் வழுத்தொடு
சிற்பொருள் காண்ப தெவன்கொல - மழித்தலால்
நீட்டலாற் கல்லாடை நீலகோ வணமணிந்து
காட்டலாற கண்டவரோ காண். (௧௩)

௪.—நூலாசிரியர்.

சண்டைசெய வேயெண்ணிச் சண்மதமுந் தேராது
கண்டபடி நூலதனைக் கட்டுமவ - ரண்டமதில்
தத்துவந்தோந் தார்போலத் தம்மைத்தா மேமெச்சு
மத்துவிதப் போலிகளா வார். (௧)

சூத்திரர்க டங்கண்டஞ் சோஷமுற வேசொல்லுஞ்
சாத்திரமே தாந்தத்தின் தாற்பரியம் - நாத்திகமே
மூக்கறுப் புண்டான் மொழிபோலு மற்றதுதா
னுக்கமிலஞ் ஞானிக்கே யாம். (௨)

ஒழுங்கொன்று மின்றி யுரைப்பரவை யெல்லா
முழுமக்கள் ஞான மொழியே - பழுதறவே
சொற்ற வவர்பாடல் சுருதிமுறை தப்பாம
லுற்றதோ வூகித் துணர். (௩)

போலிவே தாந்திகளே பொல்லாக் கலகத்தைக்
கோலித் திரிவார் குதர்க்கமே - நூலில்
வரைந்திடுவார் சம்பந்தம் வாய்ப்பவுரை செய்யா
விரைந்திடுவார் வீண்செயற்கு மேல். (௪)

சைவப் பிரசங்கந் தாஞ்செய்தல் தம்மினுந்
தெய்வம்வே றில்லை யெனுந்தீனர் - வைவா
மனையவரைச் சார்வா ரறிவிலா மாக்கள்
வினைவயப் பட்டுழல வே. (௫)

## ரு.—வேதாந்தம்.

வேதாந்தங் கூறும் விதிபிரம வாக்கியங்க
ளேதானு மொன்று லிரண்டாலுஞ் - சாதிப்பர்
தத்தமதங் கொள்பொருளைத் தக்கவா மெண்ணெழுத்தோ
டெய்த்துணர்வார்க் குண்மைவிளங் கும். (௧)

வயிற்றுச்சோற் றிற்கென்றும் வாதாடற் கென்றும்
பயிற்றுவே தாந்தப் படிப்பாஞ் - சயித்திய
சன்னிக் குணந்தான் சதாபிரமம் வாய்பிதற்றல்
தன்னறிவை மூட றகைந்து. (௨)

வேலியே யில்லாத வீணர்தம் வார்த்தையாம்
போலிவே தாந்தம் புறப்பட்டுக் - கூலிக்குப்
பிள்ளைகடாந் தெய்வத்தைப் பெற்றுரை நல்லோரை
யெள்ளவுப தேசித்த திங்கு. (௩)

வேதாந்தங் கொண்டு விளங்கு மதங்களெலாம்
வேதாந்த மேயாம் வெறுவீணர் - வேதாந்தம்
மாயாவா தம்மென்றே மாழ்கி மகிழ்ந்திடுவார்
ஆயாரே யுண்மை யவர். (௪)

ஊரைப் பகட்டிடவு மூமர்தங் கால்விழவும்
பேரைப் பிறர்வியந்து பேசிடவுஞ் - சீரை

வெகுமானங் கொள்ளவுமே வேதாந்தங் கற்றால்
தருமான மேதவர்க்குச் சாற்று. (ரு)

கலகம் படித்துக் கருவம் பிடித்தார்
இலகுவே தாந்தத் தியலும் - நலமதனைத்
தேராது புந்தியினாற் றீராவலறு சன்னி
வாரா வருந்துவர்மற் றென். (சு)

பேராசை யென்னும் பிணியாற் பிணிபபட்டோர்
ஓரார் வினையி லுழன்றிடுவார் - சீராரும்
வேதாந்தத் தின்மேவு மெய்ப்பொருளைக் காண்பாரோ
நாதாந்தத் தின்மேவி நன்கு. (எ)

வேதாந்தத் தின்மேவு மெய்ப்பொருளைக் கண்டவர்கள்
பேதாபே தங்கடமைப பேசுவரோ - வேதாந்திப்
போலிகளே யொன்றிரண்டாய்ப் பூட்டுவாநல் லோர்தம்மைக்
கேலிமிகச் செய்வர்மதி கெட்டு. (அ)

கட்டுதற்குத் தாலி கலியாண சந்தடியில்
விட்டு மறந்தவன்போல் வீணர்சொற் - கட்டுற்று
வேதாந்திப் போலி விசாரிக்கத் தன்னுண்மை
வாதாடி நிற்பான் மறந்து. (கூ)

அசடர் நவிலு மகர்த்தவே தாந்தம
நிசமென்று நம்பி நிரய - வசமாவார
தத்தமதத் துண்மை தனையாயுங் கல்வி தினை
யத்தனையு மில்லா தவா. (க0)

பொய்யர்கொள் வேடமும் போலிவே தாந்தமும்
மெய்யர்மு னென்னன மேவுமால் - பொய்யரவர்
கொண்டதொரு வேடமுங் கூறுவே தாந்தமும்
மண்டுநர கிற்கேது வாம். (கக)

கலகப் பிரியர் கலிக்கும்வே தாந்த
முலகின் மடவோர்க் குயர்வாம் - புலவர்
தெரிந்ததனி னீங்கிச் சிவாநுப வத்திற்
பிரிந்திடார் பேணார் பிறப்பு. (கஉ)

சொல்லாரும் வேதாந்த சூத்திரத் திற்குரைசெய்
யெல்லாரும் வேதாந்தி யென்மேருதார் - கல்லாதார்
நாத்திறத்தால் வேதாந்தி நாமென்றன் மாவியட்பே
சாத்திரமோ ரார்முன் றமை. (௧௩)

விராத்தியன் றன்னை விபரீதங் கொண்டு
தராதலத்தி லந்தணனென் சால்பே - யராத்தகையான்
வேதாந்தி யென்றன் மிருமத் தவிதியென்றல்
காதாந்தி யென்ற னகை. (௧௪)

௬.—மாயாவாதம்.

எத்தைமா யாவாத மென்பமேவா நூல்களெலா
மத்தையே மேலோரவ் வாறறைந்தார் - சத்தையிலா
ரம்மதப்பே ரன்னியர்பா லாக்கிக் குதுகலித்தல்
தம்மறிவைக் காட்டுந் தரம். (௧)

குலத்தை மதத்தைக் குணத்தைக் குடும்ப
பலத்தை மதிப்பைப் படிப்பி - னலத்தை
யொழிப்பதூஉங் கன்மத் துறைப்பதூஉம் ஞானச்
செழிப்பின்மா யாவாதந் தேர். (௨)

விடமாயா வாத விகாரத்தா னீங்கா
மடமாப் பிரம மருவித் - திடமாண்
டிலவாரே பேய்போ லுருத்தத்தி லாசை
யிலவாரே தம்முண்மை விட்டு. (௩)

கோர்ட்டில் வழக்கிட்டுக் கொள்ளைகொள்ள வன்னியர்க
ளீட்டியநற் செல்வத்தை யெப்படியு - நாட்டிலெங்குஞ்
சொன்மாயா வாதநன்றூந் தோடமில்லா மற்றமதம்
புன்மார்க்கந் தீர்க்கநன்றூம் போற்று. (௪)

எல்லாரு மூடரென்பா ரெம்மதமுந் தாழ்ந்தவென்பார்
சொல்லாலே கட்டுரைப்பார் தோடத்தை - யல்லாமல்
வத்துவிலே யோராநன் மாயாவா தங்கொண்டார்
அத்துவிதத் துண்மையறி யார். (௫)

வஞ்சவுரு வாமாயா வாதத்தா லும்வேறு
மஞ்சமயத் தாலு மறியலா - 'நெஞ்சிம்

கரவுடை யார தமமைக காபபா கரவாா
கரவிலா நெஞசத தவா' (௬)

தமமை யளந்தறியா ததுமேவாப பேசமபோல
வெமமைக குணததை வியபபிபொா - மூமமைப
பயனமாககட போககியே பாபுநாகுக காரா
மயனபாயா வாதிகடா பன. (௭)

உ பறறறுப பாரா ருயாபாயா வாதிகடாப
பறறறற நிலலாா பபுபபுனிபோன - மூறறக
துறநதாாபோற புனைமயொரு மேசாலவாால மேலாகது
பறநதாாா கிலலாசான பாணபு. (௮)

கலவியறி விலைாச கபவரையுப பாலைரயுந
செலவரைய பாதரையுஞ சீககிரததிர - சொலலால
வசபபடுசதிப பாரிஆயபபா மாயாவா சததா
நிசபபடுசசு மாட டாக ணினறு. (௯)

வனறுமா யாவாதி யீசனைப பூசிசசு
லொனறுகரு பருசெயத ளைபபடி யனறுகாண
ஆததிததைதக காடடிப பின ஞுைரயுமே பாறறிசசுண
நாததிககலை ச நாட யுடமெ ரனகும். (௧0)

சிவபாஞாச செலலொரு சிவமாகத தோனறு
பவமாஞாக கெலலா பவமாந - தவமிலலா
மாயாவா திசகெலலாம வபபுல கைகழுபா
மாயாாதப புணைபை யவா. (௧௧)

உலகததா ரெலலா முணாவிலரு பலலா
கலைததுக கேதுவாக காணும - நலமுறற
மாயாவா தத்தான யயாககாாகள சனமாாசச ா
ஆயாமற போகா ரவா. (௧௨)

சிவனரு ளாபபெறற சீராருஞ சைவா
அவபாயா வாதத தழுநகா - தவமுறற
நலலா சிரியாபா ஞைமனைமசை வாகமது
லெலலொநதோந தயநதிடுவ ரே (௧௩)

கடமா கவாதுபவரு சொலமாயா வாதிகடா
மமமா தனமபெண ணவாகீயகா - தமமா
ரியனறமட டும வீணவாதுக கேமூயலவா ரெனறும
பயனறெரியா சிடையிறைபார. (௧௪)

துனனுமா யாவாதச சோபையமே நமமதததி
லென்னகணமே ருணமை யியமபுவீர - மன்னை
வறிந்தநெலலாம பொயயெனபீ ரக்துவிதக கே்ர்
வெறுமபாழி லூனறிவிடு வீர (௧௫)

மாயாவா ரதகான மதிமயககா கொணடோரக
ளாயாத புலமறி வாணமையமே - போயால
கலைவிரிததுக கொணடாடுங கையலரைப போல
அலைவிரிததுக கொணடாடு வார. (௧௬)

நீணடினும பாரககினுஞ சிநதிக கினுமேறுப
வேண்டியிலாப பாபப தமேனமேலு - மீணடியே
யாணவததி னுமவிளைநதிட ரஞ்ஞான ததிலவீழ்ககுங
காணவமா யாவாதிக கா. (௧௭)

எ - மதம்.

பிரமமீ மாஞசைககுப பேசுவார ததத
பிரமதததுக கேறப வுரைகள - வரடதுகொண
டியததுணருங காலுணமை யொவவொன றிலுமுளதால
மெய்ததவா ரேதாககெயது மேயல. (௧)

மதஙகளொனறு ககொனறு மாறுகொளக கூறும
விதஙகளறி யாதவெறு வீணா மதஙகளிலே
யொனறைநகிந திததிடடே யொனறைநதா பிததிட்டே
யெனறைமா போனடிப பீர (௨)

நமமதததி னுணமை தனையறியா ரேனையமெசா
லெமமதததி னுணமை யினிதறிவா - ரெமமதததி
னுணமையறி யேலோ ருரையாடா ரெமமதததும
வுணமையறிந் தியகுவா மன (௩)

ததமதத துணமை தனைமறநத காணபயநத
பிததபர கோபததா லேதிநத - வுகதமாக

# விவேக விளக்கம்.

தீக்கையது பெற்றிருந்துந் தேசிகர்பால் வீட்டுநூ
லாக்கமுறக் கல்லாமை யால். (௪)

எல்லா மதங்களையு மெண்ணத்தில் வந்ததுபோற
சொல்லாலே கட்டுரைப்பார் தூய்மையிலார் - நல்லார்
மதசார மாம்பொருளின் வாய்மையறிந் தாங்கே
மிதசார மாச்சொல்வார் விண்டு. (௫)

சண்மதத் தாபகர் சங்கரரென் றோராதா
ருண்மதவா தத்தா லுலைவார்காண் - தண்மதியா
னல்வினைக்கஞ் செய்யாதாரா நாடுவரோ நன்னிலையை
யல்லியலஞ் ஞான மற. (௬)

ஆற்றிலெழு கண்மூடி யாரையுங் கண்மூடி
மாற்றினரு னல்ல மதங்களையே - யாற்றலிலா
ரம்மதவாய்ப் பட்டிங் கருநரகுக் காளானர்
தம்மதத்தி னுண்மைதரி யார். (௭)

தங்கிலையை யோராச சமயத்தோர் நேசத்தா
லங்கியமாப் பேசு மகங்காரந் - துன்னியதா
னல்வினைத்த ராதலெங்கே ஞானமது காண்டலெங்கே
யல்வினைத்த ராகு மவர். (௮)

அத்துவிதச் சொல்லை யநுவதித்த வெமமதமு
அத்துவித மாகு மறிவில்லார் - அத்துவிதம்
ஏகான்ம வாதந்தா னென்று மகிழ்ந்திடுவார்
தேகான்ம வாதியையொத் தே. (௯)

மாயாவா தத்தா லுமதியபா னத்தா லு
மோயாத சண்டை யுறுவதுமெய் - தேயாத
சித்தாந்த சைவத்தாற் சீவன்முத்த ராவதுமெய்
வித்தாரப் பொய்ம்மதங்கள் விட்டு. (௧௦)

எந்தமத மெத்தெய்வ மேற்ற முடைத்தென்று
சிந்தித் துணர்ந்து தெளிந்திடார் - பந்தமறு
நூற்பொருளை யோராதார் நுண்மையுணர் வில்லாதார்
பாற்பட்டுத் துன்புறுவா பார். (௧௧)

எவ்வளவோ புன்மதங்க ளெவ்வளவோ புன்னூல்க
ளெவ்வளவுங் காட்டா வமிர்தத்தை - யிவ்வளவி
லாரணங்க ளாகமங்க ளாதரிக்குஞ் சைவமே
காரணமா முத்திதருங் காண். (கஉ)

அ.—ஞானம்.

நல்ல குணநிறைவே ஞானமா மற்றதுதான்
அல்ல லறச்செய் யருஞ்சைவத் - தல்லதிலை
மூவர்மணி வாசகர் மூலர்தமிழ் வேதாந்தத்
தேவர் குறளிவற்றால் தேர். (க)

உருவத்தாற் செல்வத்தா லுத்தியோ கத்தாற்
பருவத்தான் ஞானம் பலிக்கா - தொருமித்த
சித்தத்தா லீசனடி சிந்தித்தே திந்தொழுதா
லத்துவித ஞானமதுண் டாம். (உ)

பொல்லா ரிணக்கத்தாற் போலிவே தாந்தவெறுஞ்
சொல்லான்மெய்ஞ் ஞானமது தோன்றாதா - லெல்லார்க்கும்
நல்லா ரிணக்கத்தா னாதன் றிருவருளால்
நில்லாதாற் பொய்ஞ்ஞானம னேர். (ங)

எங்குமா மம்பலத்தெம் மீச னிருப்பறியா
தெங்குமா நாமே யிறையென்பார் - துங்கமறை
'கற்றதனா லாய பயனென்கொல் வாலறிவ
னற்றா டொழாஅ ரெனின்.' (ச)

கட்புல னில்லாக் கடவுளைக் காட்டுவது
சட்டகமென் றோராச் சமயத்தார் - நிட்டையால்
வத்துநிலை தன்னை மறையங்க மாதிகளா
லுய்த்துணரும் பான்மையரோ வுண். (ரு)

ஆலயத் தாபிதமா மர்ச்சையுந் தற்சிவமா
மேலய தீர்ந்து விளங்கிடுமே - சால
விரிகட னீர்போல் விமலன்பொற் பாதம்
பிரிவருமெய்ஞ் ஞானிக்குப் பேசு. (சு)

கல்லாத பேர்களுக்குங் கற்றுணர்ந்தார் தங்களுக்கு
மெல்லாமு மாந்தெய்வ மெங்குமா - மல்லாகார்

# விவேக விளக்கம்.

தம்மை யுணரார் தமைப்பிரம மென்றெண்ணி
வெம்மைநர கத்தாழ்வர் வீந்து. (எ)

ஆசா நிகளந் துகளா யினபின்னர்ப்
பேசா வநுபூ திகம்பிறங்கு - மாசாரு
மீடணைகொண் டார்க்கிங் கிகல்பவத்திற் கேதுவாந்
தோடமது வேபிறங்குஞ் சொல். (அ)

பொன்றாத் தடிப்போ பொருதுசம யத்தர்பா
னின்ற வழக்கோ நிசாநுபவ - முன்றனக்கு
வேறாகா ஸ்வாநுபவ மேவியதேற் றன்மார்க்கக்
கூறு நவைகுறையு மே. (கூ)

சுவாநுபவ மெண்ணம்போற் சொல்வார்தமை தாமே
சுவாநுபவ மாந்தத் துவம - சிவாக்கியமே
யொன்றிரண் டாகா துணர்விலா யெப்பொழுது
மொன்றிரண் டத்துவித மோர். (க0)

"அறியார் கனவிலு மானந்த ரூப
மறிவார் தமையு மடையா - ரறிவார்கட்
கில்லாத தீங்கே யெடுத் துரைப்பா ரிவ்வுலகிற்
பொல்லார் தலையிற் பொறி." (கக)

"நாம்பெரிய ரென்னுமதை நாடா தடக்குமவர்
தாம்பெரிய ரென்றுமறை சாற்றிபிடு - நாம்பெரிய
ரென்பார் சிறிய ரிவரலா லிவ்வுலகில்
துன்பார் சுமப்பார்கள் சொல்." (கஉ)

ஊரார் பயப்படவோ வூகமிலார் கால்விழவோ
தீராப் பவமதனைச் சேர்ந்திடவோ - ஆராயார்
சாதித்தல் மோனந் தரித்திடுதல் சந்நியாசம்
போதித்தல் ஞானம் புகல். (கங)

கல்லாடைச் சாமிகட்குங் கௌபீநச் சாமிகட்கு
மல்லாடைச் சாமிகட்கு மாறுன - சொல்லாம்
"மழித்தலு நீட்டலும் வேண்டா வுலகம்
பழித்த தொழித்து விடின்." (கச)

மனமௌனங் கொள்ளார்க்கு வாய்மௌனத் தென்னுஞ்
சினமௌ வியமோவார் தேக - மினவணிந்த
பூதியத னாலென்னும் பொற்பாமோ காமுகர்க்குக்
கோதிகந்த கோவணந்தான் கூறு. (கரு)

வட்டி தொடர்வட்டி வாங்கலஞ் சம்வாங்க
திட்டவழி யிற்செல்ல சூழ்ச்சியுரை - சடங்கள்
போலித் துறவிகளும் போலிவே தாந்திகளும்
போலிப் புலவாகளும் புக்கு. (கசா)

கூ.—அத்துவிதம்.

ஒன்றென் றிரண்டென் றுரைபபரி தாய்த் தானதுவாய்
நின்றநிலே யத்துவித மீயுணர்வா - யென்றுரைக்கும்
ஆரணங்க ளாகமங்க ளவவுண்மை தததவமசி
காரணமாக் கொண்டறிவீர காண். (க)

ஒன்றென் றிரண்டென் றுரைப்பார்க ளததுவிதத
தொன்று பொருளுணரா ருண்மையே - வென்றிசேர்
சூலப் படையாய் சுருதிமுறை யிட்டபடி
யேல வுரைத்தருளா யிங்கு. (உ)

ஏக னநேக னிசைவுறற தததுவித
மாகுமென றேவ ரபிப்பிராய - மாகும
"அகர முதல வெழுத்தெல்லா மாதி
பகவன் முதற்றே யுலகு" (ங)

அத்துவித சம்பந்த மாருயிர்க்கு மீசறகும்
வைததவொரு கால வழக்கன்று - நிததமா
மந்தமரு மந்தெரியா தஞ்ஞானத தாலன்றோ
சிந்த விளக்கமதா னன்கு. (ச)

அத்துவிதத துண்மை யறிந்தார்க் ககங்கரம
வத்து சமுசயமும் வாராதால் - சித்துயிர்க
ளொன்றென் றிரண்டென் றுரையாடா ரெஞ்ஞான்றும்
நின்றவா நிற்பார் நிலே. (ரு)

"அறிவுக் கறிவென்னு மாகமங்கள் சுததத
அறிவென்னும் வேதத்தி னந்தம் - ப்ரியா

நிலைக்குச் சரியாகு நீயென்று னென்
றலைக்கு மரிபிரம னை." (அ)

"அப்பொருளு மான்மாவு மாரணநூல் சொன்னபடி
தப்பிலாச் சித்தொன்றுஞ் சாதியினு - லெப்படியுந்
தேரிற் றுவிதஞ் சிவாகமமே சொல்லுகிட்டை
யாருமிடத் தத்துவித மாம்." (எ)

உலகேயாய் வேறேயா யோங்குடனாய் நிற்ப
னலவோவெம் மீச னறிவாய் - நலமுற்ற
வப்பொருண் முன் யாவு மகிர்வசநீ யம்நீதா
னெப்பொருள்வாய்த் தோயினது வே. (அ)

மூட்டத் தெரிந்தவர்போன் மூடர்முன் பேசுவோர்
விட்டாரே லஞ்ஞான மேவுமா - லெட்டரிய
பேத மபேதமுடன் பேதாபே தங்களெனு
மேதமற்ற வத்துவித மே. (கூ)

அந்நியமுஞ் சிவற் கநந்நியமு மாய்நின்றோன்
மன்னுசிவ னென்றே மதியாதார் - சொன்னமறை
யத்துவிதத் துண்மை யறிவாரோ சொல்லளவி
லத்துவிதி நாமென் பவர். (க0)

என்னைத் தவிர விலைபிரம மென்றுரைப்பான்
றன்னைத் தவிரா சனனங்கள் - என்னைப்
பொருளாகக் காணேன் புராந்தகன்முன் னென்பா
னருளாற் றுனவனு வான். (கக)

கேட்டல்சிந் தித்தலினுந் கேடிலா மெய்த்தெளிவால்
வாட்டமிலா நிட்டையினுன் மாறுமே - கோட்டமற
வொன்றே யிரண்டென்சே ரொன்றே யிரண்டேயா
மென்றே புகன்மதங்க ளே. (கஉ)

கல்வழியி னன்னெறியை நாடினவர் மூதுரையாற்
சொல்லியமுப் பாறெரிந்து சோகம்பா வித்ததனு
லத்துவிதத் துண்மை யறிவார்கண் மற்றவரோ
மத்த மடமையறி வார். (கங)

முப்பதத்து மன்றே முடிந்த பொருடெரிந்தோர்
சொப்பனத்து மொன்றிரண்டாய்ச் சொல்லாரே-யெப்படியுஞ்
சோகம்பா வித்துச் சுகவடிவாய் நிற்பாரே
யேகம்பன் றுடலைக்கொண் டே. (கச)

தற்பதத்துந் தொம்பதத்துஞ் சார்ந்த வசிபதத்து
முற்பவிக்கு நற்பொருளை யோராதார் - தற்பதைப்பா
லொன்றென் றிரண்டென் றுரைப்பார்க ளிட்டையிலே
நின்றறியார் சற்று நிசம். (கரு)

"நிறைகுடந்தா னீர்கொளுமோ நிச்சயமா மோன
முறையுணர்ந்தார் யாதை முயல்வார் - பிறையணிந்த
மிக்ககபி லாயமலை வித்தகனே வேதியனே
செக்கரணி மேனியனே செப்பு." (கசா)

எம்மதமே சோபானமோ வெல்லா மதப்பொருளு
மம்மதமே சைவ மறிந்திடுவீர் - செம்மையா
மச்சமயத் தாலன்றி யத்துவிதச் சொற்பொருடா
னெச்சமயத் தாலறிவீ ரிங்கு. (கஎ)

அறிவாம் பிரம மகிலமாய் வந்த
தறியாமை யாலென்ப ரந்தோ - அறிவே
லறியாமை யாகா தறியாமை யென்மற்
றறிவாகா தென்றறியா தார். (கஅ)

"சொல்லுக் கடங்காச் சுகப்பொருளை நாமெனவே
யல்லும் பகலு மறிந்துவதென் - நல்லசிவ
ஞானமயம் பெற்றோர்க ளுமில்லை யென்பரந்தோ
மோனமய மான முறை." (ககூ)

நானே பிரமமென யார்கவிலை வோர்ந்தாய்நீ
தானே மகத்தெசய் சாந்தமாய் - வானும்
பிரமமன்றி நீயிலையோ பேதாய்நீ யன்றிப்
பிரமமிலை யோநீயே பேசு. (உ0)

"நான்று னெனுமயக்க நண்ணுங்கா லென்றுணை
வான்று னெனநிறைய மாட்டாய்நீ - யூன்றுமல்

வைத்தமவு னத்தாலே மாயை மனமிறந்து
துய்த்துவிடு ஞான சுகம்." (உக)

என்ன மகிமையுடைத் தேகான்ம வாதந்தான்
துன்னத் துவிதமாய்ச் சொற்றவரா - ரன்னமதஞ்
சார்ந்தவர்க டம்மிற் றருக்கடையார் தாமுண்டோ
தேர்ந்தடைந்தா ருண்டோ சிவம். (உஉ)

மண்ணீர்மைக் கேற்பபலம் வாரி தரும்படிபபு
முண்ணீர்மைக் கேற்ற வுணர்வுதரும - சண்ணில்
வருமா சிரியபான் மாணாக்கர் தம்பா
லுருமாறி கிறபதனு லோ. (உஙு)

'கண்டுவா ரேனுமுனைக் கைகுவியா ராயினந்த
யண்டுவாா டபை மதியேன் பராபரமே'
யென்றமெத்தை யல்லா லெதுபிரமஞ் சொல்லுமெனும
நன்றறியார்க் கன்மேறு நவில. (உச)

மெய்ஞ்ஞானங் கொண்டோர்க்கு மேலாய குணத்தினாக்கு
மென்ஞான்று மின்பளிக்கு மிந்நூல - பொய்ஞ்ஞானங்
கொண்டோாக் கங கீழாய குணத்தினாக குங்கலதங்
கொண்டோர்க்கு மஃதின்றாக கும. (உரு)

ஊகித்துப பாாக்க வுதியா தகங்காரய
மேவித்துப பாாகக விளையுமே - தாகித்து
நீரருந்து வான்போ னிலையின்மா யாவாதி
யாரருந்து வாருண்மை யாய்ந்து. (உசா)

"நூலினை யறிந்தார் போன்று நுண்ணறி வுடையார் போன்று
மாலினைத் தவிர்ந்தார் போன்றும வழியறிந் தடைந்தார் போன்று
மேலெனத் தகுந்த கோலே விதந்தலை கின்றார் நந்தி
சாலவன் றருளு நூலின் றலைபடா வுளத்த ராமே."

"ஆங்கவன் போல யானு மறுகுண முடையே னென்பா
ரோங்கவன் றொழிலக ளெல்லா முஞற்றுவல யானே யென்பார்
தேங்கிய பிரமம யானே தெளிவுறின் வேறின் றென்பா
ரீங்கிவ்வா றுரைப்போ ரெல்லா முயிரியல புணரா தோரே."

கங்கையுந் திங்களுந் தங்கிய செஞ்சடைச்
சங்கரன் பதமலா பங்கயம் பழிச்சுவாம்.

மஹோபாத்தியாய
உ. வே. சாமிநாதையர்

# ஸ்ரீ
# விளம்பரம்.

## பதிப்பித்திருக்கும் புத்தகங்கள்

| | விலை. | | தபாற் செலவு முதலியன. | |
|---|---|---|---|---|
| | ரூ. | அ. | அ. | பை. |
| அஷ்டாங்க ஹ்ருதயம் (சாரீரஸ்தானம்) .. | ௧ | 0 | ௨ | 0 |
| போகமுனிவர் ஏழாயிரம் (முதற்காண்டம்) ... | ௧ | 0 | ௧ | 0 |
| ஷை (இரண்டாங்காண்டம்) ... | ௧ | 0 | ௧ | 0 |
| சீவகசிந்தாமணி (கோவிந்தையாரிலம்பகம் உரையுடன்) | 0 | ௭ | ௧ | 0 |
| ஷை (காந்தருவதத்தையாரிலம்பகம் உரையுடன்) | ௧ | ௮ | ௩ | 0 |
| கம்பராமாயணம் (அயோத்தியாகாண்டம் முதல் நான்கு படலம் உரையுடன்) | ௨ | 0 | ௪ | 0 |
| ஷை (ஷை காண்டம் இறுதி இரண்டு படலம் உரையுடன்) | 0 | ௮ | ௧ | 0 |
| திருவரங்கத்துமாலை, உரையுடன் . ... | 0 | ௮ | ௧ | 0 |
| யாப்பியல் (இலக்கண விளக்கம்) ... ... | 0 | ௯ | ௧ | 0 |
| திருப்பாவை வியாக்கியானம் .. ... | ௧ | ௰ | ௨ | 0 |
| நித்யாநுஸந்தானம் (தென்கலை) ... ... | 0 | ௯ | ௧ | 0 |
| வடகலை குருபரம்பரை .. ... | ௧ | 0 | ௨ | 0 |
| தேசிகப்பிரபந்தம் .. ... | 0 | ௯ | ௧ | 0 |
| திருக்குறள் முதற்பாவின் பரிமேலழகருரை விளக்கம் | 0 | ௨ | 0 | ௯ |

மேற்குறித்த புத்தகங்கள் சென்னை சூளை அவதானம் பாப்பையர் வீதியில் 56-வது கதவிலக்கமுள்ள ஸஞ்ஜீவினீ வைத்யசாலையிலும், சென்னை முத்தியாலுபேட்டை தம்புசெட்டி தெருவில் சிப்பன் அச்சுக்கூடத்தலைவரிடத்திலும் கிடைக்கும்.

---

## பதிப்பித்துவரும் புத்தகங்கள்.

அஷ்டாங்க ஹ்ருதயம் - ஸூத்ரஸ்தானம்.
போகமுனிவர் ஏழாயிரம் - மூன்றாங்காண்டம்.
மாதவநிதானம்,